சங்க உறுப்பினர்களுக்கு மட்டும்

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்
# செய்தி மடல்

வெளியீடு : 06 | மாதம் : பங்குனி | ஆண்டு : 2010


கொழும்புத் தமிழ்ச் சங்க இணையத்தளத்தில் **'எம்மைப் பற்றி'** எனும் பகுதியிலுள்ள **"செய்தி மடல்"** என்பதன் பிரசுர வடிவம் இம்மடலாகும். மேலும் விபரங்களுக்கு எமது இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

இணையத்தளம்:www.colombotamilsangam.com
மின்னஞ்சல்: tamilsangamcolombo@yahoo.com
info@colombotamilsangam.com
தொலைபேசி இல : 2363759
தொலைநகல்: 2361381

## தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துக்கள்

**மலரும் தமிழ்ப்புத்தாண்டு**
**மகிழ்ச்சிகரமாகவும் மங்களகரமாகவும்**
**மலர வேண்டும் என்று**
**கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினர் பிரார்த்திக்கின்றனர்.**

இவ்வினிய புத்தாண்டில் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் உட்பட சகல உறுப்பினர்களும் சங்க அலுவலர்களும் எல்லா வளங்களும் பெற்று வாழ தமிழ்ச் சங்கத் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் வாழ்த்துகிறார்கள்.



**இடம் பெயர்ந்து வாழும் எமது உறவுகள், நாட்டின் ஏனைய பிரதேசங்களில் வாழும் எமது மக்கள், உலகின் சகல பாகங்களிலும் பரந்து வாழும் தமிழ் மக்கள் யாவரும் அனைத்து நலன்களும் உரிமைகளும் பெற்று வாழ வேண்டும் என வாழ்த்துவதில் தமிழ்ச் சங்கம் மிக்க மகிழ்ச்சியடைகின்றது.**

**"மலரும் தமிழ்ப் புத்தாண்டு**
**அன்பொளி வீசி அருள் சுரந்திடுக!"**

## பங்குனி மாதம் சங்கத்தில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வுகள்

# மகளிர் தினம்

14.03.2010 அன்று சர்வதேச மகளிர் தினத்தையொட்டிய சிறப்பு நிகழ்வு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெற்றது. தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் திருமதி.பத்மா சோமகாந்தன் அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். தலைவர் தனது உரையில் பெண்களுக்கு உள்ள உரிமைகள், அவர்களுக்கு மறுக்கப்படும் உரிமைகள், உலக நாடுகளில் பெண்ணியம் பேணப்படும் விதம், அறிஞர்கள் கருத்து என்பன பற்றி தெளிவாகக் குறிப்பிட்டார். பெண்கள் தமது சமஉரிமைகளைக் காக்க அயராது பாடுபடவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.



பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தேசபந்து, தேசகீர்த்தி லங்காமனிக் கௌசல்யா கோவிந்தபிள்ளை அவர்கள் தனது உரையை ஆற்றி அமர்ந்தார். "மார்ச் 8" என்னும் தலைப்பில் திருமதி ஔவை விக்னேஸ்வரன் சிறப்புரை ஆற்றினார். சிறப்பு விருந்தினர் தனது உரையில் மார்ச் 8 எவ்வாறு மகளிர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது என்ற செய்தியை ஆரம்பத்திலிருந்து சுருக்கமாகக் கூறினார். அத்துடன் மகளிர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டு இவ்வருடம் 100 ஆண்டுகள் நிறைவு பெறுவதும் ஒரு சிறப்பு என்று கூறினார். மேலும் தனது உரையில் கவிதை, பாடல் என்பவற்றையும் பாடிக்காட்டி சபையோரது பாராட்டைப் பெற்றுக் கொண்டார்.

அடுத்து மெல்லிசை நிகழ்வில் பாரதிதாசன், தேசிக விநாயகம்பிள்ளை ஆகியோரது பாடல்கள் இசைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இசையும் பாட்டும் கலந்த முறையில் (Fusion) அபிநய ஷேத்ரா மாணவிகள் வழங்கிய நடன நிகழ்வு இடம் பெற்றது. பெண் விடுதலை வேண்டும், நினைவு நல்லது வேண்டும், கனவு மெய்ப்பட வேண்டும், விரும்பிய பொருள் கைப்பட வேண்டும் போன்ற வேண்டுதல்களோடு பாரதியாரின் பாடலுக்கு "யாத்ரா" என்ற தலைப்பிலான நடனம் சபையோரை மகிழ்வித்தது.

அடுத்ததாக ஆட்சிக்குழு உறுப்பினர் செல்வி சற்சொருபவதி நாதன் தலைமையில் **"பெண்கள் மீதான வன்முறை அதிகரிப்புக்குக் காரணம் ஆண்களா? பெண்களா?"** என்ற தலைப்பில் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்ட விவாத அரங்கு இடம்பெற்றது. திருமதி புவனேஸ்வரி அரியரட்ணம், திரு.ஜி.இராஜகுலேந்திரா, திருமதி சந்திரபவானி பரமசாமி



ஆகியோர் ஆண்களே என்ற அணியிலும் திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா, டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன், திரு.இரகுபதி பாலஸ்ரீதரன் ஆகியோர் பெண்களே என்ற அணியிலும் வாதிட்டனர். எல்லோரது வாதத் திறமைகளையும் பாராட்டிய நடுவர், இக்கால நடைமுறையையும் வலுவூட்டும் காரணங்களையும் நோக்கும்போது பெண்களே வன்முறை அதிகரிப்புக்குக் காரணம் என்று தீர்ப்பு வழங்கினார்.



நிறைவு நிகழ்ச்சியாக சைவ மங்கையர் வித்தியாலய மாணவிகளின் "எழுந்துவிட்டாள்" என்னும் நாடகம் இடம்பெற்றது. மாணவிகள் பெண் விடுதலைப் பாடல்களை இனிமையாகப் பாடியும் நடித்தும் மகிழ்வூட்டினர். நிகழ்ச்சிகளை திருமதி வசந்தி தயாபரன் தொகுத்து வழங்கினார்.

# "நிறுவன விழா"

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையால் கடந்த வருடம் நடைபெறாதிருந்த "நிறுவன விழா" 21.03.2010 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 68வது சங்கச் சான்றோர் விருது திரு.எஸ்.பி.சாமி அவர்களுக்கு வழங்கப் பெற்றது.

இந்நிகழ்வில் பேராசிரியர் சந்திரசேகரன் அவர்கள் தலைமை உரையாற்றுகையில், தமிழ்ச் சங்கத்தின் ஆரம்பகாலம், அதன் பாரம்பரியம், அதன் இன்றைய வளர்ச்சி, ஆற்றி வரும் பணிகள் என்பன பற்றி விரிவாகக் கூறினார். சங்கச் சான்றோர் விருது பெறவிருக்கும் திரு.எஸ்.பி.சாமி அவர்களுக்கு தனது வாழ்த்துக்களையும் கூறினார்.



2010ம் ஆண்டுக்குரிய சங்கச் சான்றோனாகிய திரு.எஸ்.பி.சாமி அவர்கள் யாழ்ப்பாணம் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1936ம் ஆண்டு பிறந்த இவர் இவ்வருடம் தனது 75வது வயதில் காலடி எடுத்து வைக்கின்றார். ஆரம்ப நாட்களில் வியாபாரத் துறையில் ஈடுபட்ட இவர் தனது அயராத உழைப்பினால் வர்த்தக சங்கத் தலைவர் என்ற நிலை வரை உயர்ந்துள்ளார். பல சமூக நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றும் இவர் வடகொழும்பு இந்து பரிபாலன சபைத் தலைவராகவும் அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவராகவும் பணியாற்றி வருகிறார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்புக் கம்பன் கழகம் என்பவற்றோடு இணைந்து இலக்கியப் பணிகள் ஆற்றி வரும் இவர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் 34 வருடங்களாக ஆயுட்கால அங்கத்தவராக இருந்து வருகிறார். 1996ம் ஆண்டு மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் "தினக்குரல்" என்னும் தேசியப் பத்திரிகையை ஆரம்பித்து அதன்மூலம் பல அரிய பணிகளை ஆற்றி வருவதோடு நாட்டின் சிறந்த பத்திரிகைகளில் ஒன்றாகவும் வளர்த்தெடுத்த பெருமைக்குரியவர். "பொன்னுச்சாமி" என்ற இவரது இயற்பெயருக்கேற்ப "பொன்மனச் செம்மலாக" விளங்கி வருகிறார். தமிழ்ச் சங்கப் பணியில் மட்டுமல்லாது தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் செழுமைக்கும் ஆற்றி வரும் பணிகளையும் பாராட்டி 68வது நிறுவன நாள் விழாவில் 2010ம் ஆண்டுக்குரிய சங்கச் சான்றோர் விருதினை கொழும்புத் தமிழ்ச் சங்கம் திரு.எஸ்.பி.சாமி அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கின்றது என அவரைப் பற்றிய குறிப்புகளை ப.க.மகாதேவா தொகுத்து வழங்கியதும் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் விழா நாயகனுக்கு மலர் மாலை அணிவித்துக் கௌரவித்தார். அதனைத் தொடர்ந்து தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்கள் சங்கச் சான்றோர் விருதினை வழங்கினார். சங்கப் பொதுச்செயலாளர் திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்கள் சங்கப் பதிப்பாக வெளிவந்த அரிய புத்தகங்களை வழங்கினார்.

துணைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் தொடக்கவுரை ஆற்றும் போது சங்கச் சான்றோர் விருது வழங்கும் பாரம்பரியம் அதற்குரிய சான்றோரை தெரிவு செய்யும் முறை என்பன பற்றித் தெளிவுபடுத்திக் கூறினார். சங்கச் சான்றோர் விருது பெறவிருக்கும் திரு.எஸ்.பி.சாமி அவர்களையும் வாழ்த்தி விடைபெற்றார்.

சிறப்புரையாற்ற வந்த கொழும்புப் பல்கலைக்கழக பொருளியற்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி அவர்கள் "தமிழரின் பொருளாதாரம்" என்னும் பொருள்பற்றி ஒரு விரிவான உரையை ஆற்றினார். தமிழ்ப் பிரதேசங்களில் தமிழர்கள் மத்தியில் காணப்படும் பொருளாதார வளங்கள், மூலப்பொருட்கள், உட் கட்டமைப்பு என்பன பற்றிக் குறிப்பிட்டார். தமிழர் பரந்து வாழும் ஏனைய பிரதேசங்களில் காணப்படும் நிலைபற்றியும் கூறினார். அந்நியர் ஆதிக்கத்தில் நாடு இருந்ததிலிருந்து இன்று வரை உட்கட்டமைப்பு வசதிகள் விரிவுபடுத்தப்பட்டமை ஒரு அரசியல் பின்னணியைக் கொண்டதாகவே காணப்படுகிறது. மேலெழுந்த வாரியாக நோக்கும் போது அபிவிருத்தி போல் காணப்பட்டாலும் தமது தேவைகளை நிறைவேற்றுவதே நோக்கமாகக் காணப்படுகிறது என்றார். குறிப்பாக பெருந் தெருக்கள், புகையிரதப் போக்குவரவு யாவும் பொருளாதார மையங்களை இணைப்பதை விட இராணுவ மையங்களிலேயே முடிவடைவதையும் ஆரம்பமாவதையும் காணலாம்.

எனவே இவ்வசதிகளை எவ்வாறு கையாண்டால் அது தமிழ் மக்களுக்குப் பயனுள்ளதாக அமையும் என்பன போன்ற சிறப்பான கருத்துக்களைக் கூறி சபையினரின் கவனத்தை தன்பக்கம் திருப்பினார். தமிழ் மக்கள் வெறுமனே பல்கலைக்கழகப் படிப்பிலும் அரச உத்தியோகங்களிலும் தங்கியிராது



பொருளாதாரத்தை எவ்வாறு முன்னெடுக்கலாம் எனச் சிந்திக்க வேண்டும் எனவும் எடுத்துரைத்தார்.

சங்கச் சான்றோர் விருது பெற்ற திரு.எஸ்.பி.சாமி அவர்களைச் சபையினர் பலர் பொன்னாடை போர்த்தியும் மலர் மாலை அணிவித்தும் கௌரவித்தனர். ஏற்புரையாற்ற வந்த திரு.எஸ்.பி.சாமி அவர்கள் தனக்கு சான்றோர் விருது வழங்கிக் கௌரவித்தமைக்கு நன்றி கூறினார். தமிழரின் பொருளாதாரம் எதிர்நோக்கும் பிரச்சனைகளைச் சுட்டிக் காட்டி தன்னாலான பங்களிப்பைச் செய்யத் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

நிறைவாக நாட்டியக் கலைமணி திருமதி தயாநிதி விமலச்சந்திரன் அவர்களின் "நர்த்தன நிர்ணயா" மாணவிகளின் அஷ்டவித நாயகிகள், காவடிச் சிந்து ஆகிய கண்கவர் நடனங்கள் இடம்பெற்றன. திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். சங்க கீதத்துடன் விழா இனிதே நிறைவெய்தியது.

## நிகழ்வுகள்

**பங்குனி மாதம் நடைபெற்ற ஏனைய சங்க நிகழ்வுகள்**

**அறிவோர் ஒன்று கூடல்**

03.03.2010

"தமிழக இலக்கிய சந்திப்பு" என்னும் தலைப்பில் இன்றைய அறிவோர் ஒன்று கூடல் இடம்பெற்றது. தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். அவர் தனது தலைமையுரையில், இது ஒரு நீண்ட தலைப்பு அதைப்பற்றி நான் கூறப்போனால் அது இன்னும் நீண்டதாகி விடும். எனவே பேச்சாளர்கள் மூலமே நாம் அவற்றைக் கேட்டுத் தெரிந்து கொள்வோம் என்றார். இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச சிற்றிதழ்களுக்கான போட்டியில் பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்டோருக்கான விழாவில் கலந்துகொள்ள இலங்கையிலிருந்து சென்ற "கொழுந்து" ஆசிரியர் திரு.அந்தனி ஜீவா, "செங்கதிர்" ஆசிரியர் த.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றினர்.

முதலில் மூத்த எழுத்தாளர் அந்தனி ஜீவா உரையாற்றும் போது அவருக்கேற்பட்ட அநுகூலமான, அநுகூலமற்ற அநுபவங்கள் பற்றியும் அவர் சந்தித்த மூத்த எழுத்தாளர்கள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். பலரது வீடுகளுக்கும் நேரடியாகச் சென்று அவர்களுடன் அளவளாவிய சுவையான பல செய்திகளையும் கூறினார்.

அவரைத் தொடர்ந்து திரு.த.கோபாலகிருஷ்ணன் உரையாற்றும் போது திரு அந்தனி ஜீவா மூத்த எழுத்தாளர்கள் பலரைத் தனக்கு அறிமுகம் செய்து வைத்ததாகவும் அவர்களது எழுத்துத்துறை அனுபவங்களைப் பற்றி தாம் விபரமாக அறிந்து கொண்டதாகவும் கூறினார். இந்திய எழுத்தாளர் தமது கதைக்குக் களமான இடங்களுக்கு நேரில் சென்று தாம் பெற்ற அனுபவங்களை தெரிவித்ததாகவும் கூறினார். பலரும் இவர்களது கருத்துக்களையும் அனுபவங்களையும் செவிமடுத்து மகிழ்ந்தனர்.

### இலக்கியக்களம் - நிகழ்வு 09

05.03.2010

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 13வது இலக்கியக்களம் நிகழ்வில் "தமிழ்ச் சிறுகதையும் வ.வே.சு ஐயரும்" என்னும் பொருள்பற்றி மோசஸ் M.A. அவர்கள் உரையாற்றினார். அன்றைய நிகழ்வுக்கு சங்கத்துணைத் தலைவர் திரு.மு.கதிர்காமநாதன் தலைமை தாங்கினார். தலைவர் தனது உரையில் சிறுகதை பற்றியும் வ.வே.சு.ஐயர் பற்றியும் எடுத்துக் காட்டாகச் சில செய்திகளைத் தொட்டுப் பேசினார். உரைஞர் தனது உரையில் வ.வே.சு.ஐயர் சிறுகதை வளர்ச்சிக்கு ஆற்றிய பங்குகள் பற்றிச் சிறப்பான செய்தி கள் பலவற்றைக் கூறினார். சிறுகதையின் தந்தையென்று அழைக் கப்படும் வ.வே.சு.ஐயர் தமிழ்ச் சிறுகதைக்கு அளப்பரிய சேவைகள் ஆற்றியமை பற்றியும் குறிப்பிட்டார்.

### நூலகம் (சிறுவர் பகுதி)

06.03.2010

"கதை கதையாம் காரியமாம்" என்ற நிகழ்வில் திருமதி கலைமகள் மகேந்திரன் கலந்து கொண்டு சிறுவர்களுக்கான கருத்து மிக்க கதைகளைக் கூறி மகிழ்வித்தார்.

### அறிவோர் ஒன்று கூடல்

10.03.2010

அன்றைய தினம் இடம்பெற்ற அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வில் மதுரை களரி கவிதை இதழ் ஆசிரியர் கவிஞர் அருணா சுந்தராசன் உரையாற்றினார். தமிழ்ச் சங்க நூலகச் செயலாளர் வைத்தியக் கலாநிதி தி.ஞானசேகரன் தலைமை வகித்தார். தமிழக இலங்கை கவிதை வரவுகள் பற்றிய சில செய்திகளோடு தலைமையுரையை நிறைவு செய்தார். உரையாற்றிய திரு சுந்தராசன் அவர்கள் தமிழக இலங்கை கவிதை உறவுகள் பற்றிய பல விரிவான செய்திகளைக் கூறி சபையோருக்குச் சில புதிய தகவல்களையும் வழங்கி நிறைவுசெய்தார்.

### அறிவோர் ஒன்று கூடல்

17.03.2010

"தமிழ்ப்பாரம்பரியச் செல்வங்களைப் பாதுகாத்தல்" என்னும் தலைப்பில் இன்றைய அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வு இடம்பெற்றது. சங்கத்துணைத் தலைவர் திருமதி பத்மா சோமகாந்தன் தலைமை யில் இந்நிகழ்வு ஆரம்பமானது. தலைவர் தமிழ்ப்பாரம்பரிய செல்வங்கள் பற்றிய நல்ல முகவுரையை தனது உரையின் போது ஆற்றி வைத்தார். உரையாற்ற வருகை தந்திருந்த நூலக இணைய அமைப்பு நிர்வாக இயக்குநர் திரு.க.சசீவன் தனது உரையில் பல நல்ல கருத்துக்களைக் கூறினார். பாதுகாக்கப்பட வேண்டிய தமிழ்ப் பாரம்பரியச் செல்வங்களைப் பற்றி நல்ல தெளிவாக எடுத்துரைத்தார். இணையத்தளம் பற்றிய பல அரிய செய்திகளைப் பலரும் பாராட்டினர்.



### வாக்கேயக்காரர் வரிசையில்

19-03-2010

மாதந்தோறும் இடம்பெறும் வாக்கேயக்காரர் வரிசையில் என்னும் நிகழ்வில் இம்முறை முத்துஸ்வாமி தீஷிதர் பற்றிய உரையும் பாடல்களும் இடம்பெற்றன. இசைத்துறை இளங்கலைமாணி, முதுமாணி, முதுதத்துவமாணி செல்வி உதயதிவ்யமணி மகாலிங்கம் மிகவும் சிறப்பாக நிகழ்வை நடாத்திச் சென்றார். மிகவும் திறமையான ஒருவருக்கு மேடை அமைத்துக்கொடுத்து ஊக்குவித்த பெருமை தமிழ் சங்கத்தைச் சேரும். திருமதி சைந்தவி நிஷாகரன் (வயலின்), திரு.வை.வேணிலான் (மிருதங்கம்) திரு.வரதராஜா (கடம்) ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக பங்குகொண்டு நிகழ்ச்சிக்கு மெருகூட்டினார்.

தொடக்கவுரையாற்றிய துணைத் தலைவர் சபா ஜெயராசா அவர்கள், மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துஸ்வாமி தீஷிதர் காசியில் வித்யா மந்திரம் பயின்றவர் என்றும் சடாட்சர மந்திரத்தை உச்சரித்து தியானத்தில் இருந்து திருத்தணியில் முருகனது அருள் பெற்றதாக பரம்பரைக் கதையுண்டு என்றும் கூறினார். இவரது நவ வர்ண கீர்த்தனைகள் சிறப்புப் பெற்றவை. அவரது கீர்த்தனைகளில் இராகபாவம் மேலோங்கி நிற்கிறது. இறுவில் வீரமணி ஐயரும் இறையருளையும் இசையையும் இணைத்தே கீர்த்தனைகள் பாடியுள்ளார். இவ்வாறு பல செய்திகளைக் கூறி இசையரங்கை ஆரம்பித்து வைத்தார்.

முத்துஸ்வாமி தீஷிதர் திருத்தணி, காஞ்சி போன்ற தலங் களுக்குச் சென்று கீர்த்தனைகளைப் பாடியுள்ள செய்தியைக் கூறி அக்கீர்த்தனைகளைச் சுருதி சுத்தமாகப் பாடியும் காட்டினார் உதய திவ்யமணி.

சிவஸ்தலங்களான அருணாச்சலம், திருவாரூர், சிதம்பரம் போன்ற தலங்கள் மீது பூலோக பஞ்சலிங்க கிருதிகளைப் பாடி யுள்ளமை பற்றி கூறி அவற்றைப் பாடிக்காட்டினார். திருவானைக்கா அகிலாண்டேஸ்வரி மீது பாடிய கீர்த்தனையை இனிமையாகப் பாடினார். தீஷிதர் ஒரு முறை ஆலய தரிசனத்துக்கு சென்றவேளை பூசகர் கதவைப் பூட்டிச் சென்று விட்டார். உடனே இவர் அம் மூர்த்தியை வேண்டிப்பாட கதவு திறந்து இவருக்கு அருள் பாலித்ததாகவும் கூறினார். இன்னொரு சந்தர்ப்பத்தில் அமிர்தவர்சிணி இராகத்தைப் பாடி மழையை வருவித்ததைக் கூறி அப்பாடலையும் பாடிக்காட்டினார். நிறைவாக வாதாபி கணபதி என்ற ஹம்சத்வனி இராக கீர்த்தனையை மிகவும் சிறப்பாகப் பாடி சபையோரது பலத்த கரகோஷத்துடன் நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

### நூலகம் (சிறுவர் பகுதி)

20-03-2010

"கதை கதையாம் காரியமாம்" என்ற நிகழ்வில் திருமதி தயாநிதி அரசரத்தினம் கலந்து கொண்டு சிறுவர்களுக்கான கருத்து மிக்க கதைகளைக் கூறி மகிழ்வித்தார்.

**அறிவோர் ஒன்று கூடல்**

24.03.2010

அன்றைய அறிவோர் ஒன்றுகூடலில் "பயன்தரு பகவத் கீதை" என்னும் பொருள் பற்றி திருமதி.தயாநிதி அரசரெத்தினம் உரையாற்றினார். நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய ஆட்சிக்குழு உறுப்பினர் சந்திரபவானி பரமசாமி அவர்கள் பகவத் கீதை பற்றி பல ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன என்றார். உபநிடதக் கருத்துக்கள் பலவற்றையும் உள்வாங்கி அவற்றின் பிழிவான இது அருச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டது. பயன் தரு பகவத் கீதை பற்றி சுருக்கமாக உரையாற்றவுள்ளார் இன்றைய பேச்சாளர் என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

உரைஞர் பேசுகையில் பகவத் கீதை போர்ச் சூழலில் தோன்றிய ஒரு பக்தி இலக்கியம் என்றார். அத்துடன் இது ஓர் உளவியல் நூல், தத்துவ நூல் என்றும் குறிப்பிட்டார். போர்ச்சூழலில் மிகவும் பாதிக்கப்பட்ட ஒருவர் நான் என்றபடியால் இந்த நூல் எனக்குப் பயன் தந்தது. ஒரு பெண் சிரித்ததால் மகாபாரதமும், சிரிக்காததால் இராமாயணமும் தோன்றியது என்று கூறுவர். மகா பாரதத்தில் 6வது பாகத்தில் பீஷ்மர் பருவத்தில் 3வது அத்தியாயத்தில் பகவத்கீதை கிருஷ்ணனுக்கு உபதேசிக்கப்படுகிறது. கீதை வீரத்தையும் போதிக்கிறது. சுதந்திர தாகத்தையும் ஊட்டுகிறது என்று பல ஆதாரங்களுடன் பேசினார். இது முக்காலத்துக்கும் பொருந்தும் ஒரு நூல் என்ற படியால் பயன்தரு நூல் என்ற தலைப்பைத் தெரிவு செய்ததாகக் கூறினார். இந்தியாவில் இந்து மதத்தில் 29000இற்கு மேற்பட்ட சாதியுண்டு. ஆனால் அனைத்துச் சாதியினரும் பகவத் கீதையை ஏற்கின்றனர் என்றும் கூறினார்.

**நூலகம் (சிறுவர் பகுதி)**

27-03-2010

"கதை கதையாம் காரியமாம்" என்ற நிகழ்வில் திருமதி அஹுஜா அருள்முரளி கலந்து கொண்டு சிறுவர்களுக்கான கருத்து மிக்க கதைகளைக் கூறி மகிழ்வித்தார்.

**ஆரோக்கிய வாழ்வுக்கான கலந்துரையாடல்**

28-03-2010

மாதந்தோறும் நடைபெறும் ஆரோக்கிய வாழ்வுக்கான கலந்துரையாடல் தமிழ்சங்க துணை நிதிச் செயலாளர் வைத்திய கலாநிதி அனுஷ்யந்தன் தலைமையில் இடம்பெற்றது. சரும வியாதிகள் என்னும் தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. சரும வியாதிகள் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை என சபையோரிடமே கேள்விகளைக் கேட்டு அவர்கள் மூலமே பதிலையும் பெற்று நல்ல ஒரு தலைமையுரையை ஆற்றி வைத்தார் தலைவர். நிகழ்ச்சியில் வைத்திய கலாநிதிகள் ஜின்னாஹ் ஷரிபுத்தீன், எஸ்.எஸ்.அருளானந்தம், எஸ்.யோகவிநாயகம், சைவப்புலவர் சு.செல்லத்துரை ஆகியோர் பங்கு கொண்டு உரையாற்றினர். வைத்திய கலாநிதி ஜின்னாஹ் ஷிபுத்தீன் உரையாற்றுகையில் சரும வியாதிகள் எவ்வாறு பரவுகின்றன என்பது பற்றியும் இவ்வியாதி தொடுவதன் மூலமும் தொடாமலும் பரவக்கூடியது என்று பல உதாரணங்களுடன் விளக்கினார். தனக்கு ஏற்பட்ட அநுபவங்கள் பற்றியும் நல்ல ஒரு உரையை ஆற்றினார். அதைத் தொடர்ந்து சைவப்புலவர் செல்லத்துரை அவர்களும் ஏனையோரும் தமது அனுபவங்களையும் கூறினர். உளநல ஆலோசகர் கா.வைத்தீஸ்வரன் அவர்கள் நிகழ்ச்சி இணைப்பாளராகச் செயற்பட்டார்.

குறிப்பு:-

மாதந்தோறும் இடம்பெறும் ஆரோக்கிய வாழ்வுக்கான கலந்துரையாடல் 28.02.2010 அன்று துணைநிதிச் செயலாளர் வைத்தியக் கலாநிதி அவர்கள் தலைமையில் "ஆரோக்கிய வாழ்வில் உடல் உழைப்பின் பங்கு" என்னும் பொருளில் கலந்துரையாடல் இடம் பெற்றது. அன்றைய நிகழ்வில் வைத்திய கலாநிதி திரு.எஸ்.எஸ்.அருளானந்தம் சைவப்புலவர் சு.செல்லத்துரை ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார். உளநல ஆலோசகர் திரு.கா.வைத்தீஸ்வரன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். சென்ற மாத இதழில் இச்செய்தி இடம்பெறவில்லை. தவறுதலுக்கு வருந்துகின்றோம்.

**ஆட்சிக்குழுக் கூட்டம்**

28-03-2010

மாதந்தோறும் இடம்பெறும் சங்கத்தின் ஆட்சிக்குழுக் கூட்டம் தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**அற்றைத் திங்கள்**

30-03-2010

அற்றைத் திங்கள் நிகழ்வில் தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் தனது தலைமையுரையில் கே.சண்முகம்பிள்ளை அவர்களைப் பற்றியும் அவரது திறமைகள் பற்றியும் உரையாற்றினார். கே.சண்முகம்பிள்ளை அவர்கள் தனது அனுபவங்களை விரிவாக எடுத்துக் கூறினார். வாத்தியக் கருவிகள் பற்றியும் பல செய்திகளை எல்லோரும் விரும்பும் வகையில் உரையாற்றியதோடு இசை நுணுக்கங்கள் பற்றியும் சிறப்பாக எடுத்துரைத்தார்.

**அறிவோர் ஒன்று கூடல்**

31-03-2010

டென்மார்க்கில் இருந்து வருகை தந்திருந்த திரு.வி.ஜீவகுமாரன் "புலம்பெயர் வாழ்வில் எனது இலக்கியத்தளம்" என்னும் தலைப்பில் உரையாற்றினார். நூலகச் செயலாளர் வைத்திய கலாநிதி தி.ஞானசேகரன் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

வைத்திய கலாநிதி அவர்கள் எழுத்தாளர் ஜீவகுமாரனைப் பற்றி அறிமுகம் செய்து வைக்கையில் எனது ஞானம் சஞ்சிகையில் இவரது கட்டுரைகள், கதைகள் வெளிவந்துள்ளன என்று கூறினார். 24 வருடங்களுக்கு முன்னர் புலம்பெயர்ந்த இவர் ஒரு கணனி பொறியியலாளர். பல சிறு கதைகள், கட்டுரைகள், நாவல்களை எழுதியுள்ள இவர் ஸ்காண்டிநேவிய அரச துறையில் தமிழ் நூல் கொள்வனவு துறையில் ஒருவராக பணியாற்றுகிறார். புலம்பெயர் மக்களின் வலி, உணர்வு இவற்றை தனது புலம்பெயர் இலக்கியங்

களில் எழுதியுள்ளார் என்று அறிமுகம் செய்து வைத்து தலைமையுரையை நிறைவு செய்தார்.

டென்மார்க்கில் உள்ள சூழல் அங்குள்ள தமிழ் எழுத்தாளர் நிலை என்பனவற்றைப் பின்னணியாகக் கொண்டு தான் இலக்கியங்களைப் படைப்பதாக ஜீவகுமாரன் கூறினார். தனது சிறுகதை, நாவல்களில் உள்ள சில பகுதிகளை வாசித்தும் காட்டினார். தாங்கள் உடல் ரீதியாக புலம் பெயர்ந்திருந்தாலும் தங்கள் உணர்வுகள் தாய் நாட்டினைச் சிந்தித்த படியே உள்ளன என்றார்.

நல்ல ஒரு நடையில் அவரது ஆக்கங்கள் அமைந்திருந்தன. புதிய யுக்திகளைக் கையாண்டு அவற்றின் மூலம் அடுத்த தலைமுறைக்குக் கூறவேண்டிய செய்திகளைப் பதிவுசெய்து கொண்டிருக்கிறோம். காவடிக்குப் பின்னாலிருந்து கயிறு இழுப்பவருக்கு ஏற்ப ஆடுவதுபோல் இங்கிருந்து இழுக்கும் கயிறுகளுக்கு ஏற்ப ஆடுகிறோம் என்று கூறினார்.

தாய் நாட்டின் அரசியலோடும் இலக்கியத்தோடும் வாழ்வோடும் இணைந்துதான் புலம்பெயர் இலக்கியம் முன்னெடுத்து செல்லப்பட வேண்டிய ஒரு தேவையும் அவசியமும் இருக்கிறது என்றார்.

எதிர் காலத்தில் நல்ல ஒரு இலக்கியம் உருவாக வாய்ப்புக்கள் உண்டு. நிதர்சனமான நிகழ்வுகளையே இலக்கியங்களாகப் படைக்கும் போது அவை மக்களைச் சென்றடைகின்றன என்றும் கூறினார்.

தனது புத்தகங்கள் பலவற்றை பார்வையாளர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினார். பல எழுத்தாளர்களும் வருகை தந்து நிகழ்ச்சியை சிறப்பித்தனர். கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர்.

## பங்குனி மாதம் நடைபெற்ற நிகழ்வு

### கல்விச் செயற்பாடுகள்

19, 20, 21ம் திகதிகளில் கொழும்பு வலயப் பணிமனை ஆரம்ப பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி M.ஜீவராணிபுனிதா அவர்களின் ஆலோசனையின் பேரில் தமிழ்ச் சங்க அனுசரணையுடன் முதல் நிலை 1 ஆசிரியர்களுக்கான மகிழ்ச்சிகரமான கற்றலுக்கான பயிற்சிக் கருத்தரங்கு தமிழ்ச் சங்க மேல் மாடியில் இடம்பெற்றது. இக்கருத்தரங்கில் பேராசிரியர் சோ.சந்திரசேகரன், பேராசிரியர் சபா ஜெயாராசா ஆகியோரும் உரையாற்றினார்.

26, 27, 28ம் திகதிகளில் முதல்நிலை 2, 3 ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இடம்பெற்றது.

முதலாவது அமர்வில் 49 ஆசிரியர்களும் இரண்டாவது அமர்வில் 52 ஆசிரியர்களும் கலந்து கொண்டு, தாம் பெற்ற அனுபவங்களை எழுத்துவடிவில் சமர்ப்பித்தனர்.



## சங்கத்தில் நிகழ விருப்பவை

### கல்விப் பணி

க.பொ.த.(உயர்தரம்) 2010ம் ஆண்டு பரீட்சைக்குரிய முன்னோடி வினாப்பத்திரங்கள் தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் தயாரிக்கப்படுகின்றன. விஞ்ஞானப் பிரிவில் 4 பாடங்களுக்கும் வர்த்தகப் பிரிவு 3 பாடங்களுக்கும் கலைப்பிரிவு 2 பாடங்களுக்கும் இவ்வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு இதுசம்பந்தமான கருத்தரங்குகள் ஏப்ரல், மே மாதங்களில் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளன. அதில் கலந்துகொண்டு பயன்பெற விரும்புவோர் தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாவட்ட மாணவர்களுக்கிடையேயான விவாத அரங்கு இடம்பெறவிருக்கின்றது.

திருக்குறள் மலர் ஒன்றும் வெளியிட கல்விக்குழு தீர்மானித்துள்ளது. தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகள் இம்மலரில் இடம்பெறவுள்ளன.

## சித்திரை மாதம் நடைபெறவிருக்கும் நிகழ்வுகள்

### "தமிழிசை மரபில்"

**"தமிழிசை மரபில்"** என்னும் நிகழ்வு 30.04.2010 வெள்ளிக்கிழமை 6.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் திரு.டபிள்யு.எஸ்.செந்தில்நாதன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. **''அருளாளர் மாணிக்கவாசகர்''** என்ற தலைப்பில் கலைமாணி திருமதி நிலானி கோபிசங்கர் அவர்களின் உரையிடைப்பட்ட பாட்டு, பக்கவாத்தியங்களுடன் இடம்பெறும்.

செய்திமடல் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ளவும்.

**ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி**
**பொதுச்செயலாளர்**

**வடிவமைப்பு: ப.க.மகாதேவா ஆட்சிக்குழு உறுப்பினர்**

கொழும்புத் தமிழ்ச் சங்கம்,
இல.07, 57ஆவது ஒழுங்கை,
கொழும்பு 06.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களைக் காட்சிப்படுத்தலும் கணனிப்படுத்தலும்

எழுத்தாளர்களே! புதிய நூல்களை வெளியிடும்போது கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்துக்கு இரண்டு பிரதிகளை அனுப்பிவையுங்கள். கொழும்புத் தமிழ்ச்சங்கம் இலங்கையிலுள்ள பெரிய நூலகங்களில் ஒன்றாகும். நீங்கள் அனுப்பும் நூல்களை **'புதிய வரவுகள்'** பகுதியில் காட்சிப்படுத்துவதோடு, ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் உள்ள பகுதியில் வாசகர் பாவனைக்கும் வைக்கப்படும். அத்தோடு அறிஞர்களால் தேர்ந்தெடுக்கப்படும் நூல்கள் கணினியில் பதிவு செய்யப்பட்டு "noolaham.com" இணையத்தின் மூலம் உலகெங்கிலும் உள்ள வாசகர்கள் உங்கள் நூல்களை அறிந்து கொள்ளவும் வாசிப்பதற்கும் வகைசெய்யப்படும். நூல்கள் எமக்குக் கிடைத்ததும் அதுபற்றி உங்களுக்குத் தெரியப்படுத்துவோம்.

**நூல்கள் அனுப்பவேண்டிய முகவரி:-**
பொதுச்செயலாளர்,
கொழும்புத் தமிழ்ச்சங்கம்,
இல.07, 57ஆவது ஒழுங்கை,
கொழும்பு - 06.